1974 மார்ச் 13]

நடுவர் முடிவிற்கு விடப்பட்ட தொழில் தகராறுகள்.

* 408—வின.—திரு. தி.சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா:

1973-74-ல் சென்னை நகரில் உள்ள ஹோட்டல்களில் ஏற்பட்ட தொழில் தகராறுகளுள் எத்தனை இண்டஸ்டிரியல் டிஸ்பியூட் சட்டப்படி மத்தியஸ்தத்திற்கு விடப்பட்டன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஐந்து.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த டிரிபியூனலுக்கு விடப்பட்ட தொழில் தகராறுகளிலே எத்தனை தீர்ந்திருக்கிறது—தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது ? தீர்ப்பு வழங்கப்படாமல் மிச்சம் இருப்பவை எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தொழில் தகராறு தீர்ப்புக்கு விடப்பட்டவை மொத்தம் 31. இதுவரையிலே தீர்க்கப்பட்டவை 29. மீதமுள்ளவை 2.

தீப்பெட்டித் தயாரிப்புப் பிரிவு.

* 409—வின : திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கதர்–கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக தீப்பெட்டித் தொழிற்சாலை திறக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) திருவண்ணாமலை வளர்ச்சி மாவட்டம், புத்தியாவரத்தில் குடிசைத் தொழில் முறையில் தீக்குச்சித் தயாரிப்புப் பிரிவு ஒன்றைத் தொடங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மூலப்பொருள்கள், இரசாயனப் பொருள்கள் முதலியவற்றைக் கொள்முதல் செய்தல் போன்ற தொடக்க ஏற்பாடுகள் பெரும்பாலும் செய்து முடிக்கப்பட்டு விட்டன. உரிமம் வழங்குவதற்காக வேலூர் மாவட்ட வருவாய் அதிகாரி மாவட்ட சுகாதார அதிகாரியின் அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். உரிமம் பெறப்பட்டவுடன், இப்பிரிவு உற்பத்தியைத் தொடங்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தத் தீப்பெட்டி தொழிற்சாலையைத் துவங்குவதற்கு எவ்வளவு செலவாகும் ? இந்தப் பணி எப்பொழுது முடியும் என்று எதிர் பார்க்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, எவ்வளவு செலவாகும் என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை. 1973–74-வது ஆண்டில் புதிதாக 6 பிரிவுகளைத் திறக்க வேண்டுமென்று கதர்

கிராமத் தொழில் ஆணைக்குழு, தேவையான நிதியை முதலில் ஒதுக்கியது. ஆனால், இப்பொழுது நிதிப் பற்றாக்குறை காரணத்தினால், ஏற்கனவே தொகை ஒதுக்கப்பட்டிருந்தாலும், 1973–74-ல் புதிய பிரிவுகள் எவையும் தொடங்கப்படக் கூடாது என மீண்டும் அறிவுரைகள் ஆணைக் குழுவின் சார்பிலே விடப்பட்டிருக்கின்றன. ஆகவே, இதுபற்றி மேற்கொண்டு என்ன செய்வது என்பதைப்பற்றி நமது மாநில வாரியம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, அண்மைக் காலம் வரையில் 6 பைசாவுக்கு விற்ற தீப்பெட்டி இப்பொழுது 12 பைசாவுக்கு விற்கிறது. இதனால், புகைபிடிப்பவர்களுக்குச் சங்கடமாக இருக்கிறது. ஆகவே, இந்தத் தொழிற்சாலைகளைப் பல இடங்களில் விரிவாக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, வரி உயர்வின் காரணமாகத்தான் விலை ஏறி இருக்கிறது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். ஆனால், நம்முடைய கதர்-கிராமத் துறையைப் பொறுத்தவரையில், ஏற்கனவே 14 தொழிற்சாலைகளைத் தமிழ் நாட்டிலே நடத்திக் கொண்டு வருகிறோம். ஆனால், தனியார் தொழிற்சாலைகளோடு போட்டி போட முடியாத நிலைமையிலே இந்தத் தொழிற்சாலை நடந்துகொண்டிருக்கிறது. ஆயத் தீர்வை, நாடா சுற்றும் முறை ஆகியவை நீக்கப்பட்டிருந்தாலும், தனியார் துறை பல் வேறு முறைகளைக் கையாண்டு லாபத்திலே நடத்துகிறார்கள். பல காரியங்களைச் செய்கிறார்கள். ஆனால் துறையின் மூலமாக அவைகளைச் செய்ய இயலாத—முடியாத காரணத்தினால்—அவர்கள் தகாத காரியங்களைச் செய்கிறார்கள்—அவைகளை நாம் செய்ய முடியவில்லை. ஆகவே, துறையாலே நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகள் நஷ்டத்திலே நடந்துகொண்டிருக்கின்றன என்பதையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

THIRU K. S. KOTHANDARAMIAH : Already there are small match factories in our State. They are being run as a cottage industry. For want of aid, they are continuously getting loss. They are not able to run it profitably. In Hosur there is a match factory which is not being run properly because they want some more funds. May I know from the Hon. Minister whether some aid is given for such poor industries?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, நஷ்டத்தில் நடப்பதற்கான காரணத்தை நான் ஏற்கனவே தெரிவித்தேன். ஹோசூரிலே நடக்கின்ற அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலை நிதிப் பற்றாக்குறையின் காரணத்தினால் நஷ்டத்தில் நடைபெறுவதாக இருந்தால், அதைப் பரிசீலனை செய்து தேவையான நிதியை ஒதுக்கலாம்.